**

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 45 |
| NAME | : | கனகமணி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 05.08.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுத்தும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும், அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியாது. அசா.4 செல்வராஜ் தெரியாது அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி அசா.7 பாலமுருகன் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை ஆகியோரை தெரியாது. அசா.10 சீதாலெட்சுமி தெரியாது அசா.11 ராமலெட்சுமி தெரியும் அசா.12 பொன்பாண்டி அசா.13 சாந்தி தெரியாது அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி தெரியாது அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா, ஆகியோரை தெரியாது அசா.19 குமரேசன் அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர் அசா.22 சுதா . அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியும் அசா.27 தெய்வகனி தெரியும் அசா.28 செல்வன் தெரியாது அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியும் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி ஆகியோர்களை தெரியாது அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியாது அசா.33 முத்துக்கனியை தெரியாது அசா.34 வசுமதி தெரியும் அசா.35 இருளப்பன் தெரியும் அசா.36 முருகன் . அசா.37 கெலின்

ஞானபிரகாசம் அசா.38 மரியசுந்தரி தெரியாது அசா.39 தேன் மொழி தெரியும் அசா.40 புஷ்பவள்ளியை தெரியும் அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் என்பவரை இங்கு வந்த பின்பு தெரியும் அசா.44 காளீஸ்வரி என்பவரை தெரியாது.

சுமார் 10 வருடங்களுக்கு முன்பு எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.60000 சீட்டில் 1 சீட்டும் ரூ.30000 சீட்டில் 1 சீட்டும், சேர்த்திருந்தேன். மொத்தம் ரூ.27790 செலுத்தி இருந்தேன். சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் ஞாயிற்றுக் கிழமை 7 மணிக்கு சீட்டு பணத்தை கட்டுவேன். சீட்டு பணத்தை எதிரிகள் வாங்கி கொண்டு நோட்டில் வரவு வைப்பார்கள். சீட்டு பணத்தை கட்ட செல்லும் போது ஆள் இல்லை. அவர்கள் ஓடி விட்டார்கள். 6,7,8 மாதங்கள் கழித்து வந்தனர். நாங்கள் வாத்தியார் வீட்டிற்கு சென்று கேட்டோம் சீட்டு பணத்தை தரமுடியாது என்றும் அசிங்கமாக வாய் பேசினார். பணத்தை வரவு வைத்த நோட்டை எரித்து விட்டார்கள். நம்பிக்கையின் பேரில் அவர்களிடம் சீட்டு போட்டேன். தற்போது வரை நான் கட்டிய பணம் எனக்கு கிடைக்கவில்லை. கிருஷ்ணன் என்பவர் புகார் கொடுத்தார். அவருடன் நாங்களும் சென்றோம். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். புகார் மனுவில் என்ன எழுதபட்டுள்ளது என்று தெரியாது. புகாரில் நான் கையெழுத்து போடவில்லை. புகாரை நான் பார்க்கவும் இல்லை. எதிரிகளில் ஒருவர் பெயர் மாயவன் மற்றொருவர் பெயர் மாயகிருஷ்ணன். மாதா மாதம் ரூ.33000 சீட்டிற்கு ரூ.300ம், ரூ.60000 சீட்டிற்கு ரூ.500ம் கட்டுவேன். நோட்டு எரிந்த விவரம் யார் சொன்னார் என்றால் கிருஷ்ணன் சொன்னார். நான் எப்போது காவல்நிலையம் சென்றேன் என்றால் கிருஷ்ணன்போகும் போது சென்றோம். எத்தனை மணிக்கு போனேன் என்றால் ஞாபகம் இல்லை. தலைமறைவாக எதிரிகள் இருப்பது குறித்து நான் கிருஷ்ணன் புகார் கொடுத்ததற்கு முன்பு ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ரூ.33000 சீட்டு 18 வாரம் கட்டி உள்ளேன். ரூ.60000 சீட்டில் எத்தனை வாரம் கட்டி உள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. கிருஷ்ணனிடம் எத்தனை வாரம் சீட்டு கட்டினேன் என எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. ஊரை விட்டு ஓடி விட்டதாக யார் சொன்னார் என்றால் கிருஷ்ணன் சொன்னார். கோயிலுக்கு சீட்டு நடத்த வேண்டும் என சீட்டு நடத்தியவர்கள் ஊரை விட்டு ஓடி விட்டார்கள் என்று கிருஷ்ணன் என்னை கூப்பிட்டதால் நான் சென்றேன் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் எவ்வித சீட்டு பணமும் எதிரியிடம் கொடுத்திருப்பது கிடையாது என்றாலும் எதிரி எவ்வித சீட்டும் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல என்னை போலிஸ் அழைத்தார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளதை கிருஷ்ணன் அல்லது மகேஷ் மாயவன் இரண்டில் யார் சொல்லி கொடுத்தார் என்றால் யாரும் சொல்லி கொடுக்கவில்லை. ரூ.33000

மற்றும் ரூ.60000 சீட்டு என்னைத் தவிர தெரிந்த நபர்கள் யாரும் போட்டார்களா என்றால் யாரெல்லாம் போட்டுள்ளார்கள் என தெரியாது. இது வரை நான் செலுத்தியதாக சொல்லும் சீட்டு யார் ஏலம் கேட்டுள்ளார்கள் யார் ஏலம் எடுத்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன விவரத்தை தற்போது தான் நீதிமன்றத்தில் முதன் முதலாக சொல்கிறேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும்இல்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணனுக்கு ஆதரவாக கிருஷ்ணன் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் 1ம் எதிரியின் குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 44 |
| NAME | : | காளீஸ்வரி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 05.08.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுத்தும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும், அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியாது. அசா.4 செல்வராஜ் தெரியாது அசா.5 ஜோசப்ராஜ் தெரியும் அசா.6 அருமைகிளி தெரியும். அசா.7 பாலமுருகன் தெரியும் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை ஆகியோரை தெரியாது. அசா.10 சீதாலெட்சுமி தெரியும் அசா.11 ராமலெட்சுமி தெரியாது. அசா.12 பொன்பாண்டி அசா.13 சாந்தி தெரியாது அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி தெரியும் அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா, ஆகியோரை தெரியாது அசா.19 குமரேசன் தெரியும் அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர் அசா.22 சுதா . அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் ஆகியோரை தெரியாது அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி ஆகியோர்களை தெரியாது அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியும் அசா.33 முத்துக்கனியை தெரியும் அசா.34 வசுமதி அசா.35 இருளப்பன் அசா.36 முருகன் . அசா.37 கெலின்

ஞானபிரகாசம் அசா.38 மரியசுந்தரி தெரியாது அசா.39 தேன் மொழி தெரியும் அசா.40 புஷ்பவள்ளியை . அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் என்பவரை தெரியும்.

2010ம் வருடத்திலிருந்து ஆஜர் எதிரிகள் சீட்டு போட்டிருந்தேன். 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.50000 சீட்டில் 1ம் ரூ60000 சீட்டில் 3 சீட்டுகளும். போட்டிருந்தேன். மொத்தம் ரூ.52,610 கட்டி உள்ளேன். சீட்டு பணத்தை ஞாயிற்றுக்கிழமை 7.30 மணிக்குள் மாயவன் கோவிலுக்குள் சென்று சீட்டு பணத்தை கொடுப்பேன். எதிரிகள் நோட்டில் எழுதி வைத்து கொள்வார்கள். நான் போய் சென்று பார்த்த போது எதிரிகள் அங்கு வரவில்லை. அதன் பிறகு 9மாதம் கழித்து தான் வந்தார்கள். நாங்கள் சென்று கேட்ட போது பணத்தை தர முடியாது என சொல்லி விட்டார்கள். வரவு வைத்த நோட்டுகளை எரித்து விட்டதாக சொல்லி பதில் சொல்ல முடியாது என சொல்லி விட்டார்கள். தற்போது வரை நான் கட்டிய சீட்டு பணம் எனக்கு கிடைக்கவில்லை. நம்ம ஊர்காரர் என்ற நம்பிக்கையில் தான் சீட்டு போட்டேன். எதிரி மீது நடவடிக்கை எடுக்க கிருஷ்ணன் புகார் கொடுத்தார். நாங்களும் சென்றோம். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ரூ.50000 சீட்டிற்கு வாரம் ரூ.500 செலுத்தினேன் ரூ.60000 சீட்டிற்கு ரூ.600 செலுத்தினேன், நான் ரூ.50000 சீட்டில் 42 வாரமும், ரூ,60000 சீட்டில் 38 வாரமும் செலுத்தி உள்ளேன். ரூ.50000 மற்றும் ரூ.60000 சீட்டுகளில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்று தெரியாது. ரூ.50000 சீட்டில் இது வரை எத்தனை பேர் ஏலம் எடுத்துள்ளார்கள் என்று தெரியாது. ரூ.60000 சீட்டில் இது வரை எத்தனை பேர் ஏலம் எடுத்துள்ளார்கள் என்று தெரியாது. புகாரை கொடுக்க நானும் சென்றேன். புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. புகாரில் கையெழுத்து போடவில்லை. புகாரை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. என்னை போலிஸார் விசாரித்தாக சொல்லும் போது ரூ.50000 மற்றும ரூ.60000 சீட்டுகளில் முறையே எவ்வுளவு பணம் செலுத்தி உள்ளேன் என எழுதி கொடுத்துள்ளேன் என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். கிருஷ்ணனிடம் எவ்வுளவு சீட்டு பணம் எத்தனை வாரம் செலுத்தி உள்ளேன் என எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். பூங்கொடீ சூசையின் கணவர் பெயர் என்னவென்றால் தெரியாது. பூங்கொடீ சூசைக்கு எந்த ஊர் என்றால் வெய்க்காலிபட்டி தான். நான்இந்த சீட்டிற்கு முன்பு சீட்டு பணம் போட்டேனா என்றால் போட்டேன். சீட்டு கோவிலின் நன்மைக்காக நடத்தபடுகிறது என்றால் சரிதான்.

கோவிலை யார் நிர்வாகம் செய்கிறார்களோ அவர்களால் தான் சீட்டு நடத்தப்படுமா என்றால் ஆமாம். நிர்வாகம் மாறும் போது யார் நிர்வாகம் பண்ணுகிறார்களோ அவர் இரண்டாவது சீட்டை கோவிலின் நன்மைக்காக எடுத்து கொள்வார் என்றால் சரிதான். எதிரிகள் மாயவன், மாயவநாதன் யார் என்றால் எதிரிகளில் ஒருவர் பெயர் மாயவன் ஒருவர் பெயர் மாயகிருஷ்ணன். 7

மாத, 8 மாத சீட்டு நடத்தவில்லை என தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆனால் கிருஷ்ணன் புகார் கொடுக்கவேண்டும் என சொன்னதால் கிருஷ்ணனுடன் சென்றேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது மகேஷ் மாயவன் வந்தார் என்றால் சரிதான். புகாரில் என்னென்ன எழுத வேண்டும் என மகேஷ் மாதவன் சொன்னார் என்றால் அவருக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. மகேஷ் மாயவன் கிருஷ்ணனிடம் என்ன எழுத வேண்டும் என சொன்ன விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

புகார் கொடுத்ததாக சொல்லும் நாளில் மகேஷ் மாயவன் காவல்நிலையத்தில் தான் இருந்தார் என்றால் சரிதான். மகேஷ் மாயவன் சீட்டு நடத்தி உள்ளார் என்றால் தெரியாது. அவருக்கும், எதிரி மாயவனுக்கும் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக பிரச்சினை உள்ளது என்றால் தெரியாது. நான் சொல்வது போல் நான் எவ்வித சீட்டும் எதிரியிடம் கொடுத்திருப்பது கிடையாது என்றாலும் எதிரி சீட்டு நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் மகேஷ் மாயவனுக்கும் கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருவதால் எதிரியை பழி வாங்க வேண்டும் என்று அவருடைய ஏற்பாட்டின் பேரில் கொடுத்த பொய் புகாரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சென்றதற்கு பின்பு தற்போது தான் போலிஸார் சம்மனை கொடுப்பதற்கு விசாரித்தார் என்றால் சரிதான். மகேஷ் மாயவன் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான்.

2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் 1ம் எதிரியின் குறுக்கு விசாணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 43 |
| NAME | : | பாலமுருகன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 05.08.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் செங்கமால் சூளையில் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் சீட்டு பிரித்தார்கள். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும், அசா.2 அந்தோணிராஜ் தெரியும், அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியாது. அசா.4 செல்வராஜ் தெரியும் அசா.5 ஜோசப்ராஜ் தெரியாது. அசா.6 அருமைகிளி தெரியாது. அசா.7 பாலமுருகன் தெரியும் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை, அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி ஆகியோரை தெரியாது. அசா.12 பொன்பாண்டி தெரியும் அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா, அசா.19 குமரேசன் அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர் அசா.22 சுதா . அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் ஆகியோரை தெரியாது அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியும் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி ஆகியோர்களை தெரியாது அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியும் அசா.33 முத்துக்கனியை அசா.34 வசுமதி அசா.35 இருளப்பன் அசா.36 முருகன் . அசா.37 கெலின் ஞானபிரகாசம் அசா.38 மரியசுந்தரி அசா.39 தேன் மொழி

ஆகியோரை தெரியாது. அசா.40 புஷ்பவள்ளியை . அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது.

2010 ம் வருடத்திலிருந்து ஆஜர் எதிரிகள் சீட்டு பிரித்தார்கள். 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.61000 ல் 2 சீட்டுகளும், ரூ.62000 ல் 2 சீட்டுகளும், ரூ.1 லட்சம் சீட்டில் 1 சீட்டும் போட்டேன். ரூ.1,70,000 நான் கட்டி உள்ளேன். சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை 7.30 மணிக்கு சீட்டு பணத்தை கட்டினேன். நான் சீட்டு பணத்தை கொடுக்கும் போது எதிரிகள் அதனை நோட்டில் வரவு வைத்து கொள்வார்கள். நான் சீட்டு பணத்தை கட்ட செல்லும் போது அங்கு ஆள் இல்லை. எதிரிகள் ஊரை விட்டு ஓடி விட்டனர். அதன் பிறகு 9 மாதங்கள் கழித்து வந்தனர். கிருஷ்ணன் என்பவர் மாயவன் கோவிலுக்கு சென்று எதிரியிடம் கேட்டார். எதிரிகள் ரூபாயை தரமுடியாது என சொன்னார்கள். எதிரிகள் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள் வரவு வைத்த நோட்டை நான் எரித்து விட்டதாக கூறினார்கள். எதிரி வாத்தியார் என்பதால் நேர்மையாக இருப்பார் என்று தான் அவரிடம் நான் சீட்டு போட்டேன். நான் செலுத்திய பணம் தற்போது வரை எனக்கு கிடைக்கவில்லை. எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கிருஷ்ணன் புகார் கொடுத்தார். போலிஸார் என்னை விசாரித்தனர்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என் வீட்டின் கதவு எண் ஞாபகம் இல்லை. வெய்க்காலிபட்டியில் மாயவன் கோவில் தெருவில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் தெரியாது. மாயவன் கோவில் தெரு பெயரில் எத்தனை தெரு உள்ளது என்றால் 5 தெரு உள்ளது. 5 தெருவிலும் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் மாயவன் கோவிலில் வரிதாரர். போலிஸார் என்னை விசாரித்தாக சொல்லும் போது நான் மாயவன் கோவிலின் வரிதாரர் என சொன்னேனா என்றால் சொன்னேன். ராம நாடார் மகன் பாலமுருகன் என்று என் தெருவில் என்னை தவிர வேறு யாரும் கிடையாது என்றால்சரிதான். ரூ.61000 சீட்டில் வாரா வாரம் ஒரு சீட்டிற்கு ரூ.500 செலுத்துவேன். நான் எத்தனை வாரம் சீட்டு செலுத்தினேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. எந்த ஆண்டு வரை சீட்டு பணம் செலுத்தினேன் என்றால் ஞாபகம் இல்லை. ரூ.62000 சீட்டில் வார வாரம் ஒரு சீட்டிற்கு ரூ.500 செலுத்துவேன். அது எத்தனை வாரம்செலுத்தினேன் என்றால் 75 வாரம் செலுத்தினேன். ரூ.1 லட்சம் சீட்டு வாரா வாரம் ரூ.1000 செலுத்தினேன்.எத்தனை வாரம் செலுத்தினேன் என்றால் 60 வாரம் செலுத்தினேன். ரூ.1 லட்சம் சீட்டில் மொத்தம் எத்தனை நபர்கள் என்றால் தெரியாது. ரூ.62000 சீட்டிலும் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்று தெரியாது. ரூ.61000 சீட்டிலும் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்று தெரியாது.

நான் என்றாவது ஏலம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். ரூ.61000 சீட்டில் எத்தனாவது வாரம் ஏலம் கேட்டேன் என்றால் 10 வது வாரம் கேட்டேன். ஏலம் கிடைக்கவில்லை. ரூ.62000 சீட்டில் ஏலம்

கேட்கவில்லை. ரூ.1லட்சம் சீட்டில் ஏலம் கேட்டதாக சொல்லபடும் அன்று யாருக்கு ஏலம் சாரியானது என்றால் ஞாபகம் இல்லை. ரூ.1லட்சம் சீட்டில் எனக்கு தெரிந்த நபர் யார் பெயராவது சொல்ல முடியுமா என்றால் அந்தோணி ராஜ், கிருஷ்ணன், ஆகீயோர்கள் இருந்தார்கள். மற்ற யார் போட்டுள்ளார் என தெரியாது.

ரூ.1லட்சம் சீட்டு இது வரை எத்தனை பேருக்கு சாரியானது என்றால் தெரியாது. மாயவன் கோவிலில் எதிரி மாயவன் நிர்வாகம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மகேஷ் மாயவன் என்பவரும் கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக பிரச்சினை இருந்து வந்தது என்றால் இல்லை. மகேஷ் மாயவன் இன்று என்னுடன் கோர்ட்டிற்கு வந்துள்ளாரா என்றால் கோர்ட்டிற்கு வந்துள்ளார். என்னை போலிஸார் எப்போது விசாரித்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. கிருஷ்ணன் புகார் கொடுத்ததிலிருந்து எத்தனை நாள் கழித்து விசாரித்தார்கள் என்றால் 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். நான் காவல் நிலையம் சென்றேன் கிருஷ்ணன் கொடுத்த புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். புகாரில் எத்தனை பேர் கையெழுத்து போட்டிருந்தார்கள் என்றால கிருஷ்ணன் மட்டும் தான் கையெழுத்து போட்டிருந்தார். புகார் கொடுக்கும் போது யாரெல்லாம் என்னுடன் வந்தார் என்றால் சீட்டு போட்டவர்கள் அனைவரும் வந்தார்கள். சுமார் 60 பேர் வந்தார்கள். சீட்டு போட்டதாக சொல்லும் நபர்கள் அனைவரும் எத்தனை சீட்டுகள் போட்டுள்ளார்கள் என்றும் எவ்வுளவு பணம் செலுத்தி உள்ளார்கள் என்றும் புகாரில் சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் ரூ.61000, ரூ.62000, ரூ.1லட்சம் சீட்டில் எவ்வுளவு பணம் செலுத்தி உள்ளேன் என்ற விவரம் புகாரில் சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான். என்னை போலிஸார் விசாரித்தாக சொல்லும் போது நான் ரூ.61000, ரூ.62000, ரூ.1லட்சம் சீட்டில் எவ்வுளவு பணம் செலுத்தி உள்ளேன் என்று எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சீட்டு போட்டதாக சொல்லும 50 நபர்கள் ஒவ்வொரு வாரம் எத்தனை சீட்டுகள் செலுத்தினார் என்று எழுதபட்டுள்ளது என்றால் தெரியாது. என்னை விசாரித்ததாக சொல்லபடும் போலிஸ் பெண் போலிஸ். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். புகார் கொடுத்தாக சொன்ன தினத்தை தவிர மற்ற நாட்களில் காவல்நிலையம் சென்றது கிடையாது என்றால் சரிதான். 1ம் எதிரி மாயவன் வெக்காலி பட்டியில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவரது குடும்பமும் வெய்யாலிபட்டியில் தான் உள்ளது என்றால் சரிதான். கொஞ்ச நாள் எதிரிகள் தலைமறைவாகி விட்டார்கள் என்று கடையம் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பாக வேறு எங்காவது புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. ஏன் கொடுக்கவில்லை என்றால் வந்தவுடன் வாங்கி கொள்ளலாம் என இருந்தேன். அந்த காலகட்டதில் 1ம் எதிரி ஆசியராக பணியில் தான் இருந்தார் என்றால் சரிதான். நோட்டை எரித்து விட்டதாக யார் சொல்லி தெரியும் என்றால் நானும் சென்றிருந்தேன் அதனால் தெரியும்.

மேற்படி விவரம் புகாரில் சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான்.

நாளது தேதி வரை மாயவன் கோவிலில் திருவிழாக்கள் வந்து நீதின்றம் மூலம் அனுமதி பெற்று தான் நடைமுறைக்கு வருகிறது என்றால் சரிதான். எதனால் அனுமதி வாங்கி திருவிழா நடக்கிறது என்றால் மாயவன் தனியாக கொடை கொடுப்பதாக சொன்னார். மற்றொரு பாட்டி பொன்ராஜ் அவரை பொன்ராஜ் என அழைப்பார்கள் முழு பெயர் தெரியாது. மகேஷ் மாயவன் எதிரி மாயவனின் எதிர் தரப்பை சார்ந்தவர் என்றால் சரிதான். அவர் தான் கடையம் ஒன்றிய திமுக செயலாளர் என்றால் சரிதான். நான் சொல்வது போல் 1ம் எதிரி எவ்வித சீட்டு பணமும நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் நான் எவ்வித சீட்டு பணமும் 1ம் எதிரியிடம் செலுத்தி இருப்பதே கிடையாது என்றாலும் சீட்டு பணமே நடத்தாத 1வது எதிரி நான் கொடுக்கும் பணத்தை வரவு வைத்து கொள்வார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவிலை நிர்வாகம் சம்பந்தமாக 1ம் எதிரி மாயவனுக்கும், மகேஷ் மாயவன் என்பவருக்கும் பிரச்சினை ஏற்பட்டு இந்த எதிரியை கோவில் நிர்வாகத்திலிருந்து நிரந்தரமாக நீக்க வேண்டும் என்பதற்காக மகேஷ் மாயவன் என்பவரின் ஏற்பாட்டில் கொடுத்த பொய் புகாரில் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தலைமறைவாக இருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமமும் கிடையாது என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் 1ம் எதிரியின் குறுக்கு விசாணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi